சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறைத் தேர்வர்கள் – புதிய பாடத்திட்டம் – அறிவியல் பாட செய்முறைத் தேர்வு – செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் தேர்வர்களின் சான்றிதழ்களில் Practical Exempted என பதிந்து வழங்குதல் – செய்முறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்தல் – அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அதிகாரம் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (வி1) துறை

அரசாணை (நிலை) எண் 23.

நாள்: 11.02.2013.
தை 29
திருவள்ளுவராண்டு 2044.

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.21, பள்ளிக் கல்வி (க்யு) துறை, நாள் 1.2.2010.
2. அரசாணை (நிலை) எண் 144, பள்ளிக் கல்வி (க்யு) துறை, நாள் 20.9.2011.
3. அரசாணை (நிலை) எண் 190, பள்ளிக் கல்வி (க்யு) துறை, நாள் 29.11.2011.
4. அரசாணை (1டி) எண் 52, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 17.2.2012.
5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 23441/பி1/2012, நாள் 2.7.2012.

---

ஆணை :-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளில் சமச்சீர் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் செய்முறைகள் செய்யவும், அதில் அறிவியல் பாட மொத்த மதிப்பெண்களில் கருத்தியல் தேர்விற்கு 75 மதிப்பெண்களும், செய்முறைத் தேர்விற்கு 25 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்விற்கான 25 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்கள் தேர்விற்கும், 5 மதிப்பெண்கள் அகத்தேர்விற்கும் மற்றும் மாற்றுத்திறனாளி, தனித் தேர்வர்கள் செய்முறை செய்யவும் அதற்கான வழிமுறைகள் அனுமதித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாடத்திற்கான தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் கருத்தியல் தேர்வில் 75 மதிப்பெண்களில் 20 மதிப்பெண்களும் மற்றும் செய்முறைத் தேர்வில் 25 மதிப்பெண்களில் 15 மதிப்பெண்களும் என நிர்ணயம் செய்யலாம் என ஆணை வெளியிடப்பட்டது. மேலும், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில்

இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வெழுதும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும், சிறைத் தேர்வர்களுக்கும் அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் கருத்தியல் தேர்வில் மொத்தம் 75 மதிப்பெண்களுக்கு மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை 100க்கு மாற்றி வேறுபாட்டை செயல்முறை மதிப்பெண்ணாகக் வழங்கலாமெனவும் தவிர்ப்பு வழங்கப்படும் தனித் தேர்வர்களின் மதிப்பெண் சான்றிதழில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநர், மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே நான்கில் படிக்கப்பட்ட ஆணையின்படி செய்முறைத் தேர்வுக்கு விலக்கு கோரும் தேர்வர்களுக்கு அவர்கள் பெறும் கருத்தியல் பாடத்திற்கான மதிப்பெண்ணை 100க்கு மாற்றி, வேறுபாட்டினை செய்முறைத் தேர்வு மதிப்பெண்ணாக வழங்கினால் கருத்தியல் தேர்வில் 75க்கு 44 மதிப்பெண்களும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெறும் மாணவர்களே செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவராக கருதப்படுவர். கருத்தியல் தேர்வில் 44 மதிப்பெண்களுக்கும் குறைவாக பெறும் மாணவர்களுக்கு மதிப்பெண்ணை 100க்கு மாற்றினால் அவர்கள் தேர்வில் தோல்வியுற்றவர்களாக கருதப்படுவர். எனவே, இதுபோன்ற நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு அவர்கள் கருத்தியலில் பெறும் மதிப்பெண்களை 100க்கு (Conversion) மாற்ற அரசுப் புள்ளி விவர வகைப்பாட்டு மையத்தில் சிரமம் ஏற்பட்டுள்ளதாலும் செய்முறைத் தேர்வு தவிர்ப்பு கோரி விண்ணப்பிக்கும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழில் Practical Exempted என பதிந்து சான்றிதழ் வழங்கினால் மாணவர்களுக்கு நலன்பயப்பதாக இருக்கும் எனக் குறிப்பிட்டு பின் வருவனவற்றிற்கு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசின் ஆணை கோரியுள்ளார் :–

(I) ஏப்ரல் 2012ல் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்களில் அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்விற்கு விலக்கு கோரிய தேர்வர்களுக்கு அவர்கள் கருத்தியல் பாடத்தில் பெற்ற மதிப்பெண்கள் மட்டும் பதிந்து மதிப்பெண் சான்றிதழ்கள் உரிய நாளில் வழங்க வேண்டுமென்பதால் வழங்கப்பட்டுவிட்டது எனவே இத்தேர்வுத்துறையின் செயலுக்கு அரசின் பின்னேற்பு ஆணை பெற்று வழங்கவும்.

(II) இனிவரும் காலங்களில் செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களில், அவர்கள் கருத்தியலில் பெற்ற மதிப்பெண்களையே உரிய மதிப்பெண்களாகக் கொண்டு, Science Practical - Exempted என பதிந்து வழங்க அரசின் ஆணையினை பெற்று வழங்கவும்.

(III) அறிவியல் பாட செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் தேர்வர்கள் உரிய மருத்துவச் சான்றுகளுடன் கோரிக்கை கடிதத்தை உரிய வழியாக அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு சமர்ப்பித்தால் மட்டுமே செய்முறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படும் என்றும், அவ்வாறு விலக்களிக்க அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கவும்.

5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து அதனை ஏற்று, அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்படும் இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வெழுதும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மற்றும் சிறைத் தேர்வர்கள் தொடர்பாக கீழ்க்கண்ட ஆணைகள் வெளியிடப்படுகின்றன :-

(i) ஏப்ரல் 2012ல் தேர்வெழுதிய தேர்வர்களில் அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்விற்கு விலக்குக் கோரிய தேர்வர்களுக்கு அவர்கள் கருத்தியல் பாடத்தில் பெற்ற மதிப்பெண்கள் மட்டும் பதிந்து மதிப்பெண் சான்றிதழ்கள் உரிய நாளில் வழங்கிய தேர்வுத் துறை இயக்குநரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கப்படுகிறது.

(ii) இனிவரும் காலங்களில் செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களில், அவர்கள் கருத்தியலில் பெற்ற மதிப்பெண்களையே உரிய மதிப்பெண்களாகக் கொண்டும் சான்றிதழ்களில் Science Practical – Exempted என பதிந்து வழங்க அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(iii) அறிவியல் பாட செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் தேர்வர்கள் உரிய மருத்துவச் சான்றுகளுடன் தங்கள் கோரிக்கை கடிதத்தை உரிய வழியாக அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு சமர்ப்பித்தால், செய்முறைத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்க அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
<u>நகல்</u>
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / கூடுதல் நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //